**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4168

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.03.2021

Accepted: 04.05.2021

Published: 01.07.2021

Citation:
Ramu, G. "Biographies of Kollimalai People in 'Sangam' Novel." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 87–94.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4168

*Corresponding Author:
ramubalagv@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Biographies of Kollimalai People in 'Sangam' Novel

**G. Ramu**
*(F10285), Full Time Research Scholar, Research Department of Tamil*
*Lady Doak College, Madurai*
https://orcid.org/0000-0002-5111-4986

**Abstract -** Anthropology can be used to understand a race, its culture, its complete understanding of its species. Entitled 'Biographies of Kollimalai People in 'Sangam' Novel', this study examines the lives of Kollimalai people from an anthropological perspective. In the novel 'Sangam', this article examines the life style of the people of Kollimalai, their rituals, customs, medical system, restrictions imposed on them by the society, punishments given to those who violate those restrictions, and religious beliefs.

**Key Words:** Tamil Novels, Criticism, Sangam novel, KV. Chinappa Bharathi, Anthropology, Kollimalai, Beliefs, Habits, Restrictions, Punishments

**References**

1. Sivakumar, K. (2016). *Tamil Novels on Tamil Tribes Ethnographic Perspective (Doctoral Research)*. Pondicherry Linguistic and Cultural Research Institute.
2. Chinnappa Bharathi, Ku. (1985). *Sangam*, Sivagangai, Selma.
3. Bhagwatsala Bharathi. (1990). *Cultural Anthropology*, Chennai, Manivasakhar Publishing House.

# "சங்கம்" புதினத்தில் கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வியல்

**க. ராமு**
(F10285) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***

*ஓர் இனத்தை, அவ்வினத்தின் பண்பாட்டை, அவ்வினத்தின் பண்பாட்டை, அவ்வினத்தைப் பற்றிய முழுமையான புரிதலை அறிய மானிடவியல் நோக்கு பயன்படும். சங்கம் புதினத்தில் கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வியல் என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வினை மானிடவியல் நோக்கில் ஆராய்கிறது. கொல்லிமலை மக்களின் வாழ்க்கை முறை, அவர்களுடைய சடங்குகள், பழக்கவழக்கங்கள், மருத்துவ முறை, சமூகம் அவர்களுக்கு விதித்த கட்டுப்பாடுகள், அந்தக் கட்டுப்பாடுகளை மீறுவோருக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள், சமயம் சார்ந்த நம்பிக்கைகள் என அனைத்து நிலைகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் நாவல்கள், சங்கம் நாவல், கு. சின்னப்ப பாரதி, மானிடவியல், கொல்லிமலை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கட்டுப்பாடுகள், தண்டனைகள்.*

## முன்னுரை

ஒரு சமூகம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள "மானிடவியல்" ஆய்வு பெரிதும் பயன்படும். கு. சின்னப்ப பாரதியின் "சங்கம்" புதினம் கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வைப் பதிவு செய்கிறது. அப்புதினத்தை மானிடவியல் நோக்கில் ஆராய்வதன் மூலம் அம்மக்களின் பண்பாட்டை, எளிதில் அறிந்துகொள்ள இயலும். அவ்வகையில் இவ்வாய்வானது "சங்கம்" புதினத்தை மானிடவியல் நோக்கில் ஆராய்வதாக அமைகிறது.

## மானிடவியல்

தமிழில் மானிடவியல் குறித்த ஆராய்ச்சியில் பக்தவத்சல பாரதி முக்கியமானவராகத் திகழ்கிறார். அவர் "மானிடவியல் எதைப் பற்றியது என்பதை சுருக்கமாக கூறவேண்டுமானால் "மனிதனைப் பற்றிய அறிவியல்" என்று கூறுவதே மிகவும் பொருத்தம். இது மனிதனை உயிரியல் நிலையிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு நிலையிலும், வரலாற்று நிலையிலும் அறிய முடியும்"[1] என்று மானிடவியலுக்கு விளக்கம் தருகிறார். "மனித இனத்தைப் பற்றிய ஆய்வு மானிடவியலாகும்"[2] என்கிறது பிரிட்டானிகா தகவல் களஞ்சியம். மானிடவியல் என்பது மனிதர்களையும், மனிதர்களின் எல்லா அங்கங்களையும் உள்ளடக்கியது எனலாம். அதனுள் அவனுடைய பிறப்பு, இறப்பு, பண்பாடு, நம்பிக்கை, பழக்கவழக்கம், தொழில், உணவு, உடை, இருப்பிடம் என அனைத்துக் கூறுகளும் அடங்கும்.

## ஆடை, ஆபரணங்கள்

கொல்லிமலையில் பெரும்பாலான ஆடவர்கள் கோவணத்தையே உடுத்தியிருந்தனர். வெளியில் செல்லும் போதோ அல்லது முக்கிய நிகழ்வுகளின் போதோ வேட்டியும், அரைக்கை சட்டையும், துண்டும் ஆண்களது உடையாக

இருந்தது. பெண்கள் பெரும்பாலும் நான்கு முழ மார்க்கட்டுச் சேலையும், மேலே ஒரு துண்டும் உடுத்தியிருந்தனர். ஆண்கள் தங்கள் தலையில் உச்சிக் குடுமியும், பெண்கள் நெற்றியில் பொட்டும், தலையில் கோடாரி முடிச்சுக் கொண்டையும் போட்டிருந்தனர். ஆண்கள் காதில் கடுக்கனும், திருமணமான பெண்கள் கழுத்தில் தாலியும் அணிந்திருந்தனர்.

### உணவு முறை

வேளாண்மை, வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல் கொல்லிமலைவாழ் மக்களின் தொழில்களாக இருந்துள்ளன. இவற்றின் மூலம் கிடைத்த சாமைக்கஞ்சி, நெல்லுச் சோறு, புளிச் சாறு, ஆனம், கடுப்பான், கொள்ளு கடுப்பான், கேழ்வரகுக் கஞ்சி, கூழ், புளிச்சான் கீரை, கருப்பட்டி பணியாரம், கோழி இறைச்சி, உப்பிட்டு வேகவைத்த பன்றி இறைச்சி போன்றவை இம்மக்களது உணவுப் பொருட்களாக அமைவதைச் "சங்கம்" புதினம் பதிவு செய்துள்ளது.

### நிலம் சார்ந்த வாழ்வியல்

கொல்லிமலைவாழ் மக்கள் தாம் வாழ்கின்ற மண்ணைப் பெரிதும் நேசிக்கின்றனர். மலையை விடுத்து வேறோர் இடத்தில் அவர்களால் வாழவே இயலாது. ஒன்றன் மீதான தங்களது வலுவான நிலைப்பாட்டைத் தெரியப்படுத்த அவர்கள் மண்ணையே முன்வைக்கின்றனர். "இந்த மாப்பிள்ளைக்கு இந்தப் பெண்ணைக் கொடுப்பதாக மண்ணைத் தொட்டு சத்தியம் செய்து கொடுக்கிறார்கள்."[3] திருமன், ஒரு வழக்கு காரணமாகச் சமவெளிப் பகுதிக்குச் செல்ல நேரிடுகிறது. அவனால் நகர்ப்புறத்துப் பழக்கங்களோடு ஒட்டி வாழஇயலவில்லை. மலையோடு ஒன்றிப்போன அவர்களின் வாழ்க்கைமுறை மலையல்லாத வேறு இடத்தில் ஒத்துவரவில்லை. "சந்தைக்கு மலை முகட்டிலிருந்து அடிவாரம் சென்று முடியும் வரையிலும் எங்கு மேடிருக்கிறது, எங்கு பள்ளமிருக்கிறது, எங்கு சரிவிருக்கிறது, எங்கு தடம் மாறுகிறது என்கிற பரிச்சயமெல்லாம் பாதங்களுக்குத் தெரியும். புறப்படத் துவங்கி கண்ணை மூடிக்கொண்டால் அடிவாரத்தில் சென்று விழித்துப் பார்க்கலாம்."[4] என்று மலையோடு பின்னிப்பிணைந்த இவர்களுடைய வாழ்க்கையை ஆசிரியர் கு. சின்னப்ப பாரதி வருணிக்கிறார்.

### குடியிருப்பு அமைப்பு

மனிதன் தங்கி வாழும் இடம் குடியிருப்பு எனப்படும். "சங்கம்" புதினத்தில், கொல்லிமலைவாழ் மக்கள் கூரை வீடுகளிலேயே தங்கியுள்ளனர். திருமனுடைய வீட்டை ஆசிரியர் விவரிக்கும்போது இதனை அறிந்துகொள்ள முடிகிறது. பனி மிகுந்த சூழலைத் தடுக்கும்வகையில் கூரைகள் தாழ்வாக வேயப்பட்டிருந்தன. குடிசையினுள் அடுப்பும் அதற்கு மேல் பரணும், குடிசையின் நடுவில் தரையில் நெல் அல்லது சாமை குத்தும் உரலும் பதிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் நிலவியல் சார்ந்த அவர்களின் எளிய வாழ்க்கையமைப்பு புலப்படுகிறது.

### நம்பிக்கைகள்

ஒன்றினை உண்மை என நம்பும் நிலையில் நம்பிக்கை மனித மனங்களில் வேரூன்றுகிறது. "தனிமனிதர்களுக்கு ஏற்படும் இன்பமும் துன்பமும், நல்லவையும் கெட்டவையும், பொருள் இழப்பும், செல்வ வளமும், அவதூறும், செல்வாக்கும், அழிவும், வளமும், பாவமும் வீடு பேறும், தோல்வியும், வெற்றியும் போன்ற அனைத்தும் இறைவனால் கொடுக்கப்படுபவையே என்ற மக்களின் நம்பிக்கை சமயம் போதிப்பதாகும்"[5] என்கிறார் பக்தவத்சல பாரதி. கொல்லிமலை மக்கள் தெய்வத்தின்பால் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும் என்றாலும் சரி, குடும்பத்தில் தொடர்ந்து இன்னல்கள் வந்தாலும் சரி அதற்குக் காரணம் தெய்வத்தின் அருளே என்று நம்பிக்கை கொண்டனர். மேலும் சிறுவன் தும்மினால் கெட்டது, சிறுமி தும்மினால் நல்லது போன்ற நம்பிக்கைகளும் அம்மக்களிடையே காணப்படுகின்றன.

## இயற்கை அறிவியல்

இயற்கையோடு இயைந்து வாழும் மக்களால் மட்டுமே இயற்கையின் ஒவ்வொரு மாற்றத்தையும் எளிதில் கண்டறிய முடியும். "தட்டான் பூச்சியும், பொறந்தும் பறந்து திரியுது. இரண்டொரு நாளிலே மழை வந்தாலும் வரும், பெருதல வண்டு கத்தினா பேய் மழை பெய்யும்பாங்க"[6] போன்ற கூற்றுகள் இயற்கை சார்ந்த அவர்களின் புரிதலைக் காட்டுகிறது.

## நெறிமுறைகள்

ஒரு சமுதாயத்தினை அதன் ஒழுங்கு தவறாமல் வழிப்படுத்துவது அச்சமூகத்தில் கடைபிடிக்கப்படும் நெறிமுறைகளே. "மக்களின் நடத்தைமுறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் எனப்படும்."[7] "ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய சமுதாயம் சுட்டிக்காட்டும் நெறிமுறைகளையம் விழுமியங்களையும் முறையாகப் பின்பற்றி நடப்பதால் மட்டுமே அச்சமுதாயம் நிலைபெற முடியும்"[8] என்கிறார் பக்தவத்சல பாரதி. கொல்லிமலையில் ஊர்ச்சபை என்றொரு அமைப்புண்டு. அவ்வுர்ச்சபை கூறும் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டே அம்மக்கள் நடக்க வேண்டும். அவற்றை மீறக் கூடாது. "ஒரு குடும்பத்தில் நல்லதோ கெட்டதோ பாதிப்போ வாதிப்போ எதுவானாலும் உறவும் சுற்றமும் ஓடிவந்து ஆறுதல் கூறுவதும் அனுசரணை புரிவதும் ஆக்கியெடுத்துச் சோறு கொண்டு வருவதும் அந்த மலை மக்களுக்கே உரித்தான ஆதாரப்பண்பு"[9] என்று "சங்கம்" புதினம் கூறுகிறது. ஒரு வீட்டில் திருமணம் என்றால் அந்த ஊரில் உள்ள ஒவ்வோர் வீட்டிலிருந்தும் ஒருவர் வந்து திருமண வேலை பார்க்க வேண்டும். அதேபோல் ஒரு வீட்டில் இறப்பு என்றால், ஊரில் உள்ள அனைவரும் தலைக்கு ஒரு ரூபாயும், வீட்டிற்கு ஒரு படி அரிசியும் கொடுக்க வேண்டும். இவை போன்றகட்டுப்பாடுகள்அம்மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## தண்டனைகள்

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்த நெறிமுறைகள் இருக்கின்றன. "நெறிமுறைகள் சமுதாய வாழ்விற்கு அரணாக விளங்குவதால் அவற்றை மீறுவோருக்கு அந்தந்தப் பண்பாட்டால் வரையறுக்கப்பட்ட "கட்டுப்பாடுகள்" அல்லது "தண்டனைகள்" விதிக்கப்படும்."[10] சமூகம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை மீறுவோர்க்குத் தண்டனை வழங்கப்படுகிறது. அத்தண்டனைகள் மூலம் சமூகம் பின்பற்றும் ஒழுங்குமுறைகள் காக்கப்படுகின்றன. கொல்லிமலைமக்கள் வாழ்விலும் சமூகவிதிகளை மீறுவோர்க்கு அபராதம் விதித்தல், பன்றி விருந்து வைத்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. திருமணமான பெண்ணுடன் தகாத உறவுகொண்ட பெரியசாமிக்கு "சபைக்கு அஞ்சு நூறு ரூவா குத்தங்கட்டணும், ஊருக்கு ரண்டு பண்ணியும், நூறு மொடா கேவுரும் விருந்தும் போடனும்"[11] என்ற தண்டனையும், முகூர்த்த ஏர் கட்டிய அன்று காட்டை எரிக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை மீறிய திருமனுக்கு "கட்டுப்பாட்டெ மீறுனதுக்காக இருவத்தஞ்சு ரூவா குத்தம் செலுத்தனும்"[12] என்னும் தண்டனையும் விதிக்கப்பட்டன. இத்தண்டனைகள் பெரும்பாலும் தண்டனை பெறுவோர் மத்தியில் பொருளாதார நலிவை ஏற்படுத்தின.

## திருமணமுறை

கொல்லிமலை மக்களுடைய திருமணமுறை பிற திருமண முறைகளிலிருந்து வேறுபடுகிறது. பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் சீதனம் கொடுத்தால்தான் அப்பெண்ணைத் திருமணம் செய்ய முடியும். இங்கு சீதனம் அப்பெண் வேலை செய்யக் கூடிய ஆற்றலைப் பொறுத்தது. "உங்க பொண்ணு பொத்தல் குடத்தில் ஆயிரம் குடம் தண்ணீர் எடுக்குமா? "உங்கப் பையெ ஆட்டுப் புழுக்கையிலே

அறுபது முழக்கயிறு திரிப்பானா?"[13] என்பன போன்ற உரையாடல்கள் அவர்களின் பண்பட்ட மனதைக் காட்டும். "நன்றாக வேலை செய்யக் கூடிய ஆற்றலும், அழகும் உள்ள பெண்களென்றால் அதிகப்படியான பரிசம் கிடைக்கும்."[14] சில வேளைகளில் குறிப்பிட்ட ஆண்டுகள் மாப்பிள்ளை, பெண் வீட்டில் தங்கி உழைக்க வேண்டிய நிபந்தனையை ஏற்க வேண்டியிருக்கும். கொல்லிமலையில் பெண் கேட்டுவரும் மாப்பிள்ளை வீட்டாரிடம், பெண் வீட்டார் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பரிசப்பணம் கொடுக்க வேண்டும் எனக் கேட்கின்றனர். மேலும் பொருந்தா மணமும் கொல்லிமலை மக்களிடையே வழக்கத்திலிருந்தது. மூன்று வயது சிறுவனை பதினெட்டு வயது பெண்ணிற்கு மணமுடித்து வைத்த செய்தியையும் "சங்கம்" புதினத்தில் காண முடிகிறது.

## பாலியல் ஒழுக்கங்கள்

கொல்லிமலை மக்களிடத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்பதான குடும்ப உறவுமுறை பெரிதும் இல்லை. பாலுணர்வு மிக்க தாம்பத்திய உறவுதான் அம்மக்களிடம் பெரும்பாலும் காணப்படுகிறது. தனது இணையைப் பிரிய விரும்பும் நபர், ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டுப் பிரிந்து கொள்ளலாம். "கணவன் மனைவியரில் யார் யாரை விட்டு முதலில் பிரிய விரும்புகிறார்களோ அவர்கள் கணவனாயிருந்தால் அவன் தன் அந்தஸ்த்துக்கேற்ப ஒரு தொகையை மனைவிக்கு கொடுத்துவிட வேண்டும். மனைவி பிரிவதாய் இருந்தால் கணவன் கொடுத்த பரிசத்தொகையையும் திருமணச் செலவையும் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்."[15] இந்த முறையில் அம்மக்கள் எத்தனை திருமணங்கள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். பல குழந்தைகளுக்குத் தாயான பின்பும், பெற்ற குழந்தைகளைக் கணவனிடமே விட்டுவிட்டு வேறு திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் அச்சமூகப் பெண்களிடையே காணப்படுகிறது. "பண்பாட்டிற்கு பண்பாடு மாறுபட்டாலும் தந்தை - மகள், தாய் - மகன், சகோதரன் - சகோதரி போன்ற மிக நெருங்கிய இரத்த உறவுடையோர் பாலுறவு கொள்வது அனைத்துப் பண்பாட்டிலும் தடைசெய்யப்பட் டுள்ளது"[16] என்கிறார் பக்தவத்சல பாரதி. கொல்லிமலைவாழ் மக்களிடமும் தாய் - மகன், தந்தை - மகள் போன்ற இரத்த உறவு கொண்டவர்கள் பாலியல் உறவு கொள்ளும் முறையில்லை. அதனை அவர்கள் ஒவ்வாத ஒன்றாகவும் கருதினார்கள்.

## மருத்துவம்

நோயோ, பிரசவமோ, எதுவாயிருந்தாலும் கொல்லிமலைமக்கள், அவர்கள் அறிந்த கைவைத்திய முறையையே பின்பற்றினார்கள். பொன்னம்மாளுக்குப் பிரசவ வலி கண்டபோது, அவளுக்கு வைத்தியம் பார்த்த திருமி சுக்கும் மிளகும் கலந்த கசாயத்தைக் கருப்பட்டியில் கலந்து கொடுக்கிறாள். சேற்றுப்புண் வராமல் தடுக்க அரிவாள் தழையைக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றையும் விளக்கெண்ணெயையும் சேர்த்து முழங்காலுக்கு கீழிருந்து பாதங்கள் வரை பூசுகின்றனர். இவர்களின் மருத்துவ முறை பரம்பரையாகக் கையாளப்படும் அனுபவத்தில் வந்தது.

## பழக்க வழக்கங்கள்

இயற்கை, கல்வி, பொருளாதாரம் போன்ற பல காரணிகள் மனிதனுடைய பழக்கவழக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்தாக்கத்தைக் கொல்லிமலைவாழ் மக்களின் பழக்கவழக்கங்களில் காணமுடிகின்றது. குளிர் மிகுந்த மலைச்சூழலில் இம்மக்கள் அன்றாடம் குளிப்பதென்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. ஆகையால், இவர்கள் வாரத்திற்கு ஒருமுறையே குளிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். "அவர்கள் குளிப்பதென்றால் ஒரு சமூகத் திருவிழா போலத்தான்."[17] வாரத்தில் ஒருநாள்

ஊர்மக்கள் யாரும் வேலைக்குச் செல்லாது ஓடையின் அருகில் அடுப்பு மூட்டிப் பானைகளை வைத்து நீரைச் சுடேற்றிக் குளித்துக் கொள்வார்கள். ஊர்மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு செய்தியைச் சொல்ல வேண்டுமானால் அதற்குத் தண்டோரா போடும் பழக்கம் இம்மக்களிடையே காணப்படுகிறது. நல்ல செய்தி என்றால் தண்டோராவும், இறப்புச் செய்தி என்றால் சாவு மேளமும் கொட்டப்பட்டது. மலைவாழ் மக்களிடத்தில் சில வார்த்தைகளுக்குப் பெருமளவில் மதிப்பு அளிக்கும் வழக்கம் காணப்படுகிறது. ஒருவன் ஒரு தவறு செய்தால் அந்தத் தவறுக்கு வருந்தி அவன் எம்முறையில் மன்னிப்பு கேட்டாலும் "மன்னிச்சு" என்று சொல்லாவிட்டால் அவனுடைய மன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வீட்டிற்கு யார் வந்தாலும் "வாங்க" என்று சொல்லி, நீர்ச்செம்பு கொடுத்து, கம்பளியை விரித்து அமரச்சொல்லும் பண்பு அவர்களிடம் இருக்கிறது. திருமணத்தில் மொய் செய்யும் வழக்கமும் கொல்லிமலை மக்களிடம் உள்ளது.

**சடங்குகள்**

கொல்லிமலை மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்பவர்கள். எனவே அவர்கள் வாழ்வில் இயற்கையைச் சார்ந்த மழைச்சடங்கு, விதைப்புச் சடங்கு போன்றவற்றைக் காணமுடிகிறது.

**மழைச்சடங்கு**

மழை பொய்த்துப் போனால் மழை வேண்டிச் "சாணிவெட்டு" விழா நடத்துகின்றனர். வீடு வீடாகச் சென்று மண்பானையில் கூழ், கஞ்சி வாங்கிக் கோவிலுக்கு முன்னால் வைத்து உப்புப் போடாமல் குடிக்க வேண்டும். பின் மாட்டுச் சாணத்தைக் கூடையில் சேகரித்துப் பிள்ளையாரின் மீது பூச வேண்டும். அதற்குப்பின் திருமணமாகாத ஆண்களும், பெண்களும் சாணி பூசி விளையாடுவதே "சாணிவெட்டு" விழாவாகும்.

**விதைப்புச் சடங்கு**

அறுவடை முடிந்த பின்னர் மறு விதைப்பிற்கு நிலத்தைத் தயார்படுத்த "முகூர்த்த ஏர் கட்டுதல்" என்னும் சடங்கினை நடத்துகின்றனர். முதல் வருட அறுவடைக்குப் பின்னர், அடுத்த வருட விதைப்பிற்கு ஏற்ப நிலத்தை ஆயத்தப்படுத்துவதற்கு முன்னர் "முகூர்த்த ஏர் கட்டுதல்" என்னும் சடங்கினைச் செய்து முடிப்பது கொல்லிமலைவாழ் மக்களின் வழக்கமாக உள்ளது.

**திருமணச் சடங்கு**

திருமணத்தின்போது அவ்வூரின் கரைக்காரர் மணமக்களை மணவறைக்கு தூக்கிக் கொண்டுவர, ஒரு கரைக்காரர் பாலுடனும், மற்றொரு கரைக்காரர் நீர்ச்செம்புடனும் பின்தொடர மணவறையை மூன்று முறை சுற்ற வேண்டும். அப்படி மணப்பெண்ணை மணவறைக்குத் தூக்கிக்கொண்டு வரவேண்டுமென்றால், கரைக்காரர் முதலில் பெண்ணின் மாமனுடைய அனுமதியைப் பெற வேண்டும். இவர்களது வழக்கப்படி, திருமணத்தில் தாலி கட்டும் உரிமை ஊர் கவுண்டருக்கானது.

**இறப்புச் சடங்கு**

சாவுச் செய்தியை அறிவிக்கும்வகையில் சாவுமேளம் கொட்டப்பட்டு, அலங்காரத் தேரில் இறந்தவரின் உடல் எடுத்துச் செல்லப்பட்டுப் புதைக்கப்படும். மறுநாள் இறந்தவரின் துணியை வைத்துப் பொங்கலிட்டுச் சூடம், ஊதுவத்தி ஏற்றிக் கும்பிடுவார்கள். இறந்தவர் தகப்பனென்றால் அவருடைய மகனுக்குத் "தலைக்குச் சீல" கட்டும் வழக்கம் அவர்களிடம் இருக்கிறது. மகனுக்கு மாமன் முறையுடையோர் புது வேட்டியும், துண்டும், கையில் காசும் கொடுக்கும் முறையே "தலைக்குச் சீலை" கட்டும் சடங்காகும்.

**புழங்கு பொருட்கள்**

ஒவ்வொரு சமூகத்திலும் அம்மக்கள் பயன்படுத்திய பொருட்கள் வழியாக

அவர்களது வாழ்வினைப் பற்றி ஓரளவு அறிய முடியும். இம்மக்கள் வீட்டில் வெளிச்சத்திற்காக வேப்பெண்ணெய் விளக்கைப் பயன்படுத்துகின்றனர். மேலும் கற்றாழை நார்க் கட்டில், மண் செப்பு, கம்பளிப் போர்வை, சாணி வளிப்பிட்ட மூங்கில் கூடை, வேட்டைக்குக் கொம்பு, ஈட்டி, துப்பாக்கி போன்ற பொருட்களை பயன்படுத்துகின்றனர். மலையிடத்தில் கிடைப்பதைக் கொண்டு அவர்கள் மேற்கொண்ட வாழ்க்கை முறையை இதன் மூலம் அறியலாம். "அகண்ட வாய் கொண்ட குண்டானில் ஊற்றிய தண்ணீரில் முகத்தைக் கவிழ்த்துப் பார்த்து நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டாள்"[18] என்பதிலிருந்து முகம் பார்க்கும் கண்ணாடி இவர்களிடத்தில் இல்லை என்பதை அறியமுடிகின்றது.

### வாய்மொழி வழக்காறுகள்

கொல்லிமலைவாழ் மக்களிடையே வழக்கில் உள்ள பழமொழிகளையும் பாடல்களையும் "சங்கம்" புதினம் பதிவு செய்துள்ளது.

### பழமொழிகள்

மக்களுடைய அனுபவங்களே பழமொழிகளாக வெளிப்படுகின்றன. "வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடுகள் தான் மக்களிடத்தில் புழங்கும் பழமொழி" அது உயிருள்ளது. உழைக்கும் மக்களின் உண்மை வாழ்வை எடுத்துக் கூறுவது."[19] இயற்கை ஒருபுறம் கொல்லிமைலைவாழ் மக்களைச் சோதித்ததென்றால், சமவெளி மக்களால் இவர்கள் கொடுந்துன்பத்தை அனுபவிக்கின்றனர். அந்த ஆற்றாமையே பழமொழிகளாக இவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன. "வரும் விதி வந்தால் படும் விதி பட்டுத்தானே ஆகனும்"[20], "கோபுரத்துக்கு வந்த ஆபத்து கலசத்தோடு போயிட்டுது"[21], "கண்ணு சொல்லியா இமெமூடுது? கலசம் சொல்லியா நெழல் உழுவுது?"[22] என்பன போன்ற பழமொழிகள் அம்மக்களின் பேச்சு வழக்கில் இயல்பாகவே இடம்பெறுகின்றன.

### பாடல்கள்

கொல்லிமலை மக்கள் உடல் உழைப்பு மிக்கவர்கள். ஆதலால் களைப்பு தெரியாமலிருக்க வேலை செய்யும்போதும், திருமணத்தின் போதும், இறப்புச் சடங்கின்போதும் தங்கள் உணர்வுகளைப் பாடல்களாகப் பாடுகின்றனர். வயல் வேலை செய்யும் போது உழவுப்பாடல்களும், காதல் பாடல்களும் இவர்களுடைய வாழ்வில் இடம்பெறுகின்றன. இவ்வகைப் பாடல்களை ஒருவர் பாட்டெடுத்துக் கொடுக்க மற்றவர்கள் பின்தொடர்ந்து பாடுவார்கள். திருமணத்தில் பெண்ணை முன்னிறுத்திய பாடல்கள் இடம்பெறுகின்றன.

> **"ஆறு ஆறாப் போற பன்னி, அறுபது பன்னி தலையறுத்து**
> **சட்டியிலெ உதரமிட்ட, சாந்தால கோலமிட்டு**
> **முன்னம் முன்னம் போற பொண்ணே!**
> **நில்லு பொண்ணே நில்லு"[23]**

இறப்பின்போது ஒப்பாரிப் பாடல்கள் பாடப்படுகின்றன. அவ்விறப்பு மனிதராகதான் இருக்கவேண்டும் என்பதில்லை. வீட்டில் வளர்க்கும் விலங்குகளாகக்கூட இருக்கலாம். ஒரு சாதாரண குடியானவன் வீட்டில் மனிதரின் இறப்பைக் காட்டிலும், வளர்த்த விலங்கின் இறப்பு மிகுந்த துன்பத்தை ஏற்படுத்தும். அப்படி சங்கம் நாவலில் திருமன் வீட்டில் வளர்த்த மாடு இறந்து விடுகிறது.

> **"ஏருமாடு**
> **கன்றுக்கெல்லாம்**
> **ஆபத்துன்னா, லச்சுமியும் போயிடுமே**
> **லச்சுமியும் போயிட்டாக்க - நாம**
> **நாண்டுகிட்டல்ல சாகவேணும்"[24]**

அந்த மாட்டின் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் கனவுகளும் சிதைந்து போனதால், அந்த ஆற்றாமையே ஒப்பாரிப் பாடலாக வெளிப்படுகிறது.

## முடிவுரை

மானிடவியல் என்பது ஒரு தனிப்பட்ட குழுவின் ஒட்டுமொத்த வாழ்வியற் கூறுகளையும் விளக்குவதைக் குறிக்கிறது. அந்தவகையில் இவ்வாய்வு கு. சின்னப்ப பாரதியின் "சங்கம்" புதினத்தில் இடம்பெறும் கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வியற் முறைகளை மானிடவியல் நோக்கில் ஆராய்ந்துள்ளது. இதன்மூலம் அம்மக்களின் உணவு, உடை, குடியிருப்பு, சடங்குகள், சமூகக் கட்டுப்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. துன்பம் நிறைந்த இவர்களுடைய வாழ்வில், இவர்களுடைய ஆற்றாமையே பழமொழிகளாகவும் ஒப்பாரிப் பாடல்களாகவும் வெளிப்படுகின்றன. கொல்லிமலைவாழ் மக்கள் குறித்த புரிதலை ஏற்படுத்துவதாக "சங்கம்" புதினம் அமைந்துள்ளது.

## குறிப்புகள்

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.63
2. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், தொகுதி 3, ப.226
3. சின்னப்ப பாரதி. சங்கம், ப.148
4. மேலது., ப.27
5. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.531
6. கு. சின்னப்ப பாரதி, சங்கம், பக்.96,24
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.160
8. மேலது., ப.528
9. கு. சின்னப்ப பாரதி, சங்கம், ப.226
10. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.161
11. கு. சின்னப்ப பாரதி, சங்கம், ப.46
12. மேலது., ப.50
13. மேலது., ப.147
14. மேலது., ப.106
15. மேலது., ப.106
16. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.380
17. கு. சின்னப்ப பாரதி, சங்கம், ப.91
18. மேலது., ப.100
19. மேலது., ப.17
20. மேலது., ப.10
21. மேலது., ப.12
22. மேலது., ப.26
23. மேலது., ப.197
24. மேலது., ப.176

## துணைநூற்பட்டியல்

1. சிவக்குமார், கே. (2016). தமிழகப் பழங்குடிகள் பற்றிய தமிழ்ப் புதினங்கள் இனவரைவியல் நோக்கு (முனைவர் பட்ட ஆய்வேடு), புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.
2. சின்னப்ப பாரதி, கு. (1985). சங்கம், சிவகங்கை. செல்மா.
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.